## முக்கிய அறிவித்தல்

சுதேச வைத்திய கல்வி நிறுவனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலைமைக் கருத்திற் கொண்டு சுதேச வைத்திய கல்வி நிறுவனம் மாணவர்களினதும் இங்கு தொழில் புரியும் உத்தியோகத்தர்களினதும் பாதுகாப்பினை உச்ச நிலையில் உறுதிப்படுத்துவதற்கும் நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் பின்வரும் அறிவித்தல்களை வெளியிட்டுள்ளது.

1. ஆயுர்வேத மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மே மாதம் 27ம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதோடு யுனானி மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் துரநெ மாத நடுப்பகுதியில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது.
2. கல்வி சார் ஊழியர்கள்இ கல்வி சாரா ஊழியர்கள்இமாணவர்கள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக இந் நிறுவனத்திற்கு வருகை தருபவர்கள் இவ்வளாகத்தினுள் அனுமதிக்கப்படுவதற்கு முன் ஒவ்வொருவரினதும் உடல்இபொதிகள் போன்றவற்றை தீவிரமாக பரிசோதித்த பின்பே உள்ளே அனுமதிக்கப்படுவார்கள்.
3. சகல வாகனங்களும் தீவிரமாகப் பரிசோதனைக்குட்படுத்திய பின்பே நிறுவனத்திற்கும் விடுதிகளுக்கும் உள்ளே அனுமதிக்கப்படும்.
4. ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் வாகனம் உட்செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதோடு அதை வாகனத்தில் காட்ச்சிப் படுத்தவும் வேண்டும்.
5. நிறுவனத்திற்கு உள்ளும் இவிடுதிகளிலும் மாணவர்கள் முகத்திரை போட அனுமதிக்கப்படமாட்டார்கள்.இது தவிர தலை இ காதுஇ கழுத்து போன்றவைகளும் தேவையேற்படும் போது பாதுகாப்பு அதிகாரியினால் பரசீலிக்கப்படும் .
6. மாணவர்கள் தமது அடையாள அட்டையை மாணவர்கள் நிறுவனத்திலும் இ விடுதியிலும் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும்.
7. பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் மாத்திரமே விடுதிக்கு உட்செல்லுவதற்கும் தங்குவதற்கும் அனுமதிக்கப்படுவர்.
8. மாணவர்களைச் சந்திப்பதற்கு விடுதிக்குள் யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
9. பயணப் பொதிகள்இ புத்தகப் பொதிகள் போன்றவற்றை எக்காரணம் கொண்டும் விரிவுரை மண்டபத்திற்கோ பரீட்சை மண்டபத்திற்கோ நூலகத்திற்கோ அல்லது ஆய்வு கூடத்திற்கோ கொண்டு செல்வதற்கு மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
10. மாணவர்கள் சிற்றுண்டிச் சாலைக்கும் புத்தகப் பொதிகள் கொண்டு செல்வதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.
11. மாணவர்கள் காலை 6 மணியிலிருந்து இரவு 7 மணி வரை மாத்திரமே நிறுவனத்தில் பிரசன்னமாகி இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். தேவையேற்படின் நிறுவனத்தின் அனுமதியைப் பெற்றே மேலதிக நேரத்திற்குத் தங்க முடியும்.
12. அபாய நிலைகளின் போது செயற்படுவதற்கான அறிவுறுத்தல்களும் இஅவசர கால நிலைகளின் போது தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கங்களும் அறிவித்தல் பலகைகளில் காட்சிப்படுத்தப்படும்.
13. பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வெற்றிடம் நிரப்பப்படுவதற்கான ஏற்பாடுகள் எடுக்கப்படுவதோடு கூடிய பாதுகாப்பும் வழங்கப்படும்.
14. மாணவர்கள் கூடுதலாகச் சேரும் நிகழ்வுகளை நிறுவனத்தின் உள்ளேயும் வெளியேயும் மாணவர்கள் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.
15. அபாய நிலைகளின் போது மாணவர்கள் கீழ்க் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.